னி) ஒரு புதிய பணிமனை அமைக்கப்பட்டால்கூட அதற்குத் தேவையான முழு திட்ட மதிப்பீடு ரூபாய் ஒரு கோடிதான் வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணிமனைக்குத் தேவையானவை என கேட்பது, கான்கிரீட் தளம் அமைக்கின்ற பணிகள். அதற்குண்டான திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் மட்டுமே. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. டெண்டர் விடப்பட்ட பணிகள் முடிவுபெற்ற பின்பு, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

மீன் பண்ணை

***5734—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கவும், அங்கு பிடிக்கப்படும் மீன்களை ஒகேனக்கல், பென்னாகரம் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒகேனக்கலில் பிடிக்கப்படும் மீன்கள் அவ்வூர் மக்களின் தேவைகளுக்கேற்ப உள்ளூரிலும், அருகிலுள்ள பூச்சியூர், நாகமரை, செம்மேடு ஆகிய ஊர்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஒகேனக்கலில் ஏற்கெனவே அரசு மீன் பண்ணை உள்ளது. அதில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக அரசின்மூலம் மேலும் மீன் பண்ணை அமைக்க உத்தேசமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் அமைந்துள்ள, சிறந்த சுற்றுலா மையமான ஒகேனக்கலில் காவிரி ஆற்றில் கிடைக்கும் மீன் சுவை மிகுந்திருப்பதால், சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பி சுவைக்கின்ற காரணத்தால், மீன் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. எனவே, காவிரி ஆற்றங்கரையில் மீன் பண்ணை அமைத்து, மீன் வளத்தைப் பெருக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிவதோடு, ஒகேனக்கல் பகுதியில் பிடிபடும் பெரும்பகுதி மீன்கள், 86 கிலோ மீட்டர் தூரம் சாலை வழியாகவும், 45 கிலோ மீட்டர் தூரம் நீர் வழியாகவும் மேட்டூருக்கு பல நேரங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. பொது மக்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் கிடைக்கின்ற வகையில் இந்தப் பகுதிகளிலேயே இம்மீன்களை விற்பனை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியில் பிடிக்கப்பட்ட மீன் அளவு 2.116 டன் ஆகும். அதாவது மாதத்திற்கு 200 கிலோவிற்குக் குறைவாக இருக்கிறது. நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 60 கிலோவிற்குக் குறைவாகத்தான் வருகிறது. ஒகேனக்கல் பகுதியில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் அவ்வூர் மக்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் 546 உறுப்பினர்களுக்கு பென்னாகரம் பகுதியில் மீன் பிடித்திட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. பென்னாகரத்தில் தனியார்மூலம் மீன் விற்பனை செய்யும் தினசரி சந்தை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. ஒகேனக்கல்லில் ஏற்கெனவே அரசு மீன் பண்ணையும் உள்ளது. இப்பண்ணைகளில் மீன் குஞ்சுகளை வளர்த்தெடுத்தல் பணிகளும் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒகேனக்கல்லில் உள்ள மீன் பண்ணை வளர்ப்புத் தொட்டிகளின் எண்ணிக்கை 8. அதன் பரப்பளவு 2,870.85 சதுர மீட்டர் ஆகும். இந்த மீன் வளர்ப்புத் தொட்டிகள்மூலம் கடந்த ஆண்டில் மட்டும் 6 இலட்சம் மீன்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இப்பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் அனைத்து அரசு மீன் உற்பத்தி நிலையங்களுக்கும், எஞ்சியவை தனியாருக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்கு படகு ஓட்டுவது, சமையல் செய்து தருவது, எண்ணெய் தேய்ப்பது, மீன் பிடிப்பது போன்ற தொழிலையே நம்பியுள்ள ஒகேனக்கல், ஒட்டப்பலை, பிலிகுண்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள், சுற்றுலாப் பயணிகள் வரும் பருவ காலங்களைத் தவிர மற்ற பருவ காலங்களில் வேலையின்றி வறுமையில் வாடும் நிலையில் உள்ளார்கள். இம்மக்களைப் பாதுகாக்க அவர்களைப் பொருளாதார ரீதியில் வளர்த்திட, மீன் பண்ணைகள் அமைத்தும், அதைச் சார்ந்த தொழில்களை அமைத்தும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா என்று அறியதோடு, ஏற்கெனவே மீன் வளத் துறைமூலம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்ட மீன் பண்ணைகள் பெரும்பகுதி பயன்படுத்தப்படாத நிலையிலே உள்ளதை ஆராய்ந்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறியதோடு, காவிரி ஆற்றில் மீன் இனப் பெருக்கத்திற்கு ஏதுவான சில பகுதிகளில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக, தமிழக எல்லையான அதாவது, கர்நாடக எல்லையில் பாட்டிப்பாறை—கன்னடத்தில் இதனை அச்சுப்பாறை என்று சொல்வார்கள்—ஆலம்பாடி, பிலிகுண்டு, ராசிமணல், உகுனியம் தாண்டிச் சென்று 70 கிலோ மீட்டருக்கு அப்பால் வரை நம்முடைய மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்து வருகிறார்கள். தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக வனத் துறையினரே கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அஞ்செட்டி வனச் சரகத்தைச் சேர்ந்தவர்கள் மீனவர்களைத் தாக்குவது, கைது

செய்வது, அழுத்தும் செய்வது, அபராதத் தொகை வசூலிப்பது, மீன் பிடிக்கத் தடை செய்வது, சாலையில் செல்ல தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதன் காரணமாக மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நஞ்சப்பன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. நா. நஞ்சப்பன்: அரசு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து அந்த மீனவர்களைப் பாதுகாக்க, பாரம்பரியமாக மீன் பிடிக்கும் அந்தப் பகுதியில், தொடர்ந்து மீன் பிடிக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று, ஒகேனக்கல் பகுதி மீனவர்கள் அந்தப் பகுதியில் உள்ள வனத் துறை அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள் என்ற தகவல் இதுவரை அரசால் பெறப்படவில்லை. எந்த இடத்தில் மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

ஒகேனக்கல்லில் ஆலம்பாடி முதல் ஊட்டமலை வரை ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் வரை மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதி. அந்தப் பகுதி மீன்களின் சரணாலயம் என்று அழைக்கப்படுகிறது. ஒகேனக்கல்லை சுற்றியுள்ள அந்தப் பகுதிகளிலே சுற்றுலாப் பயணிகள் வரும்போது மீன்கள் தேவை அதிகமாக ஏற்படுகிறது. அந்த நேரத்திலே அங்கு பிடிக்கப்படக்கூடிய மீன்கள் அளவு குறைவாக இருக்கக்கூடிய காரணத்தால் பூச்சியூர், நாகமரை, செம்மேடு போன்ற பகுதிகளிலும், மேட்டூர் அணை மீன் விற்பனை கூட்டுறவு சங்கத்திலும் இருந்து மீன்கள் பெறப்பட்டு, அங்கே விற்பனை

செய்யப்படுகின்றன. ஆக, அங்கு தேவையான அளவு மீன் பெறப்படுகிறது. அங்கு 8 மீன் பண்ணைகளும் ஏற்கெனவே இருக்கின்றன. அவற்றின் உற்பத்தி 6 இலட்சம். அங்கு மீன் பண்ணைகள் சரியாக செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலை தருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இனி இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற உயர்ந்த இலட்சியத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்தும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாயினை ஒதுக்கி மீன் பண்ணைகள் அமைக்க உத்தரவிட்டு, ஒப்பந்தங்கள் பெறப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

அடிப்படை வசதிகள்

***445—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பெரியார் அரசு பொது மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் நியமனம் செய்யவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.